Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
PEOPLES DAILY
மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 19 (05-10-1991) சனிக்கிழமை ஓசை: 229

## 12 வேங்கைகளின் நினைவாக எழுச்சிநாளும், நினைவுகூட்டமும்

(நமது நிருபர்)

லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளினதும் நாலாம் ஆண்டு எழுச்சி நாளும் நினைவுக் கூட்டமும் இன்று மாலை ஐந்து மணிக்கு வல்வெட்டித்துறை தீருவில் மாவீரர் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. இன்று மாலை 3.30 மணிக்கு உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் மாபெரும் எழுச்சி ஊர்வலம் சதுக்கத்தைச் சென்றடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகும். மேற்படி எழுச்சிக் கூட்டம் மாலை ஐந்து மணிக்கு வடமராட்சி மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் (4ம் பக்கம் பார்க்க)

பாராளு. உறுப்பினர் தங்கும் சிராவஸ்தியில்

# யாழ். மாவட்ட உறுப்பினருக்கு இடம் ஒதுக்க வேண்டாம்!

## எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் கோருவர்

(கொழும்பு)

யாழ். மாவட்ட சுயேச்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் தங்கு விடுதியான சிராவஸ்தியில் இடம் ஒதுக்க வேண்டாம் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் எம். எச். முகமட்டிடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது சிராவஸ்தியில் சுமார் நாற்பது எம் பிக்கள் தங்கியுள்ளனர். இவர்களில் ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சார்ந்தவர்கள் ஐவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சார்ந்த இருவரும் தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த இருவரும் ஈ. என். டி. எல். எவ்வைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவர்.

யாழ் மாவட்ட சுயேச்சைக் குழுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிராவஸ்தியில் தங்கி இருப்பது தமது பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கலாம் என்று இவர்கள் சபாநாயகர் எம். எச். மொகமட்டிடம் புகார் செய்ய தீர்மானித்துள்ளனராம்.

தற்போது 37ஆவது பொது நலவாய அமைப்பு நாடுகளின் பாராளுமன்ற மாநாட்டில் (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்ட பாராளு. உறுப்பினரில் இரண்டு பேர் பெண்கள்

அலுவலகம் இயங்காது.

## சல்லிப்பிட்டியில் உயர் அதிகாரி உட்பட நான்கு இராணுவம் காயம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சல்லிப்பிட்டி இராணுவ முகாமிலிருந்து ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் உயரதிகாரி ஒருவர் உட்பட நான்கு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

வியாபார நோக்கில்

## வவுனியா செல்வோரின் பயண ஒழுங்கில் மாற்றம்

வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் அனுமதி சனிக்கிழமையாக மாற்றப்பட்டதனாலும் ஒரே நாளில் முல்லைத்தீவு, கிளி (4ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தில் மாணவர் பங்காற்ற ஆசிரியர் பங்கு பணி அவசியம்

### ஆசிரியர் தினக் கூட்டத்தில் யோகி

(யாழ்ப்பாணம்)

மாணவர் சமுதாயத்தை நமது போராட்டத்திற்கு சாதகமான முறையில் அல்லது பாதகமான முறையில் மாற்றக்கூடிய வகையில் ''ஒரு கருத்தினை'' மாணவர்களின் மத்தியில் உருவாக்கவல்ல ஆற்றல் ஆசிரிய சமுதாயத்திடம் உண்டு. எனவே நமது மாணவ சமுதாயத்தை நமது போராட்டத்திற்கு ஏற்ற வகையில் வளர்த்தெடுத்து நம் மினத்திற்கு விரைவில் விடுதலையை பெற்றுக் கொடுக்கக் கூடிய விதத்தில் நற்பணி

றின் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட ஆசிரியர் தின நிகழ்ச்சிகளில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகமான திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் குறிப்பிட்டார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சி

போராளிகளில் பலர் பதினான்கு பதினைந்து வயதுக்கு குறைவான மாணவர்களாவார்கள் அவர்களை நமது போராட்டத்திற்கு ஏற்ற வகையில் தயாராக்கும் கல்விப் போதனையை தமிழீழ இராணுவப்படைத்துறைப் பள்ளியின் மூலம் மேற்கொண்டு வருகின்றோம். அப்பள்ளிக்கு ஆசிரிய சமுதாயமாகிய உங்களது ஆலோசனையும் ஒத்துழைப்பும் அவசியமானதாகும். இராணுவ படைத்துறைப் பள்ளியில் கற்பிக்கப்படும் பாட

யாற்ற ஆசிரியர்கள் முன்வர வேண்டும் இவ்வாறு யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்

யில் அவர் மேலும் பேசுகையில் இன்று நம்முடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள

ளியில் கற்பிக்கப்படும் பாடங்களில் நமது போராட்டத்திற்கு வேண்டிய அம்சங்கள் கற்பிக்கப்படுகின்றன அங்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுயேச்சைக் குழு 8ஆம் திகதி பாராளுமன்றம் செல்லும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக மேலும் மூவர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களில் இருவர் பெண்களாகும்.

யாழ். மாவட்டத்திற்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒன்பது பேரில் ஆறு பேரினது நியமனப் பத்திரங்கள் ஏற்கனவே தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது தெரிந்ததே. மீதமுள்ள மூன்று பேர்களுமே தற்பொழுது நியமிக்கப்படவுள்ளனர்.

திலகவதி ரெங்கசாமி 2-ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, கோணாமலை மாதவராசா, வருணாமேடு தம்பலகாமம், தமயந்தி சிவசுந்தரலிங்கம், கோவிற்குளம், வவுனியா ஆகியோரே புதிதாக நியமனம் பெறவுள்ளவர்களாகும்.

முன்னர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த ஆறு பேரும் புதிதாகத் தாக்கல் செய்யவுள்ள மூவரும் விரைவில் கொழும்பு செல்வார்கள் என தெரியவருகின்றது. கொழும்பு செல்லும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யாத மூவரும் ஏழாம் திகதி தேர்தல் ஆணையாளரிடம் தமது நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்வர் என்றும், சகல யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் எட்டாம் திகதி பாராளுமன்றத்தில் பதவிப் பிரமாணம் செய்வர் எனவும் தெரியவருகிறது.

## இயங்காது.

(யாழ்ப்பாணம்)

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நாலாம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி இன்று சகல பிரயாண அனுமதி வழங்கும் அலுவலகங்களும் மூடப்பட்டிருக்கும் என தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள சகல கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள் கலந்துகொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை (06-10-91) பி. ப. 2 30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மேலும் இரண்டு மாதம் காவலில் வைக்க உத்தரவு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பதினைந்து பேரையும் மேலும் இரண்டு மாதங்களுக்கு காவலில் வைக்கும்படி நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

ராஜீவ் காந்தி வழக்கை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிபதி சித்தீக் இந்த ஆணையை விடுத்துள்ளார்;

இவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு சிறைக் கூடத்திற்கு சென்று இந்த ஆணையை பிறப்பித்துள்ளதாகவும் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே சித்தீக் சிறைக்குச் சென்று இந்த ஆணையைப் பிறப்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் காந்தி வழக்குத் தொடர்பாகசிறப்புப் புலனாய்வுக் குழுவினரால் இதுவரை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டிய அவசியம் எதுவும் எமக்கில்லை

- லலித்

(கொழும்பு)

நாம் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதால் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு அமைய நடக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு எமக்கு இல்லை. ஆனால், சுதந்திரக் கட்சி, அரசாங்கத்தின் மீது கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக நாம் வாக்களிக்க வேண்டும் என்ற கடப்பாடு எமக்கு இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானித்துள்ளோம். ஆனால் அதனை இப்பொழுது வெளியிட நான் விரும்பவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தை அரசாங்கம் உரிய முறையில் கையாளாவிட்டால் அரசாங்கம் நிச்சயம் தோல்வி அடையும். இவ்வாறு பத்திரிகையாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார். பத்திரிகையாளர்கள் கேட்ட சில கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:

கேள்வி: யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்றம் வருவதை நீங்கள் விரும்பவில்லையா?

லலித்: அவர்கள் பாராளுமன்றத்திற்கு வந்து எந்த முறையில் புலிகள் இயக்கத்தின் பயங்கரவாத செயல்களைக் கண்டித்து அறிக்கை விடுவார்கள் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என பதிலளித்தார்.

## நம்பிக்கையில்லா பிரேரணை நிச்சயம் தோல்வியைத் தழுவும்

(கொழும்பு)

ஐ தே. கட்சி அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயமாகத் தோல்வியைத் தழுவும் என சிறிலங்கா வீடமைப்புத் துறை அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

ஐ. தே. க. யின் பொதுச் செயலாளருமாகிய சிறிசேன கூரே பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர் அரசாங்கத்தையும், ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவையும் ஆதரித்து நிற்கிறார்கள். ஆதரிப்பதாக உறுதியும் அளித்திருக்கிறார்கள் என்றும்;

அரசாங்கத்திற்கு கிடைக்கவிருக்கும் வெற்றியினால் எதிரணியினர்க்கு பெரும் ஏமாற்றமும் அதிர்ச்சியும் காத்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

## மதகுகளின் கீழ் இருந்து அனுரா புலிகளுடன் பேசவில்லையா?

### கேகாலை மாவட்ட எம். பி. சிறிசேன

(கொழும்பு)

வவுனியாக் காட்டில் மதகுகளின் கீழ் 1988 இல் விடுதலைப் புலிகளுடன் அனுரா பண்டார நாயக்கா பேசவில்லையா என கேகாலை மாவட்ட எம் பி. சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

தொனியகலைப் பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். 1989 இல் ஜனாதிபதி புலிகளுடன் பேசியது பற்றி எதிர்க்கட்சியினர் இப்போது குறை காண்கின்றனர். பிரச்சினைகளுக்கு சமரசத் தீர்வு காணும் நோக்கமாகவே இப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

நாம் பதவிக்கு வந்தால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக 1988 இல் ஜனாதிபதி தேர்தலின் போது திருமதி பண்டாரநாயக்கா பேசியதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்; ஜனநாயக மக்கள் கூட்டு அமைத்த எதிர்க்கட்சி திரு. குமார் பொன்னம்பலத்துடன் சென்ற அனுரா வவுனியாக் காட்டில் புலிகளுடன் பேசினார் என்றும் அவர் கூறினார். அப்போது தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி கூட பாராளுமன்றத்தில் பேசும் போது அனுரா மாத்தயா தலைமையிலான புலிகளுடன் பேசியதாகக் குறிப்பிட்டார்.

இலங்கை இந்தியக் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை விட கூடுதலான சலுகைகளை ஜனநாயகமக்கள் கூட்டு வழங்கத் தயார் என திரு பண்டாரநாயக்கா புலிகளுக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டில் மாலைதீவு ஜனாதிபதி கலந்து கொள்வார்

(மாலே)

மாலைதீவு ஜனாதிபதியும் சார்க் அமைப்பின் தற்போதைய தலைவருமான திரு. மாமூன் அப்துல் கயூம் கொழும்பில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் விசேட பிரதிநிதியாக வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் சார்க் நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு மாலைதீவுக்கு சென்ற போதே திரு. அப்துல் கயூம் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளதோடு, கொழும்பு மாநாட்டில் தாம் கலந்து கொள்வதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

## வரி விளம்பரம்

### தேவை

லக்ஸ்பிறே, ஹைலாண்ட் மற்றும் பாஸ்மா வெற்றுப் பக்கற் 50 நல்ல நிலைமையில் சேர்ப்பித்து ஒரு அழகிய உள்ளூர் உற்பத்தி கைப்பைஞ்சிலை அன்பளிப்பாகப் பெறுங்கள். மில்க்வைற் (B/3250)

### தவறிவிட்டது

கண்ணாடி, அடையாள அட்டை, போக்குவரத்து அனுமதிப்பத்திரம் ஆகியவை திருநெல்வேலியில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் T. ஜெயசிங்கம் 21-பிள்ளையார் வீதி. திருநெல்வேலி தெற்கு திருநெல்வேலி யாழ்ப்பாணம். அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R/1806)

## நடிகர் தேவை

தொலைக் காட்சிப் படமொன்றில் நடிப்பதற்கு ஒரு நடிகர் தேவை 60 வயது மதிக்கத்தக்க, சாதாரண தோற்றமுடையவராகவும் ஓரளவு குரல் வளமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். முன் அனுபவம் வேண்டியதில்லை: படத்தில் நடிக்கும் ஆர்வம் போதுமானது.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 1991 10 07 (திங்கள்) காலை 10 மணிக்கு (சரியாக) நிதர்சனம் செயலகத்தில் சமுகமளிக்கவும்.

(B/3255)

''நிதர்சனம்''
நீப் வீதி,
திருநெல்வேலி,
தமிழீழம்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

1991-10-05



லெப். கேணல் புலேந்திரன்



லெப். கேணல் குமரப்பா



மேஜர் அப்துல்லா



லெப். அன்பழகன்



2ஆம் லெப். ஆனந்தகுமார்



கப்டன் நளன்



1987 ஆம் ஆண்டு இந்திய - சிறிலங்கா அரசுகளின் கூட்டுச்சதியை வெளிக்காட்டு முகமாக தம்முயிரைத் தந்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட

லெப். கேணல் புலேந்திரன் (குணநாயகம் தருமராசா - பாலையூற்று, திருக்கோணமலை)

லெப். கேணல் குமரப்பா (பாலசுந்தரம் இரத்தினபாலன் - ரேவடி, வல்வெட்டித்துறை)

மேஜர் அப்துல்லா (கணபதிப்பிள்ளை நகுலகுமார் - சாவகச்சேரி)

கப்டன் கரன் (வைத்திலிங்கம் மனோகரன் - வன்னிச்சி அம்பன் கோயிலடி, வல்வெட்டித்துறை)

கப்டன் மிரேஸ் (தவராஜா மோகனராஜா - வல்வெட்டித்துறை)

கப்டன் பழனி (பாலசுப்ரமணியம் யோகேந்திரராஜா - வல்வெட்டித்துறை)

கப்டன் நளன் (கணபதிப்பிள்ளை குணேந்திரராஜா - பருத்தித்துறை)

லெப். அன்பழகன் (தேசோமயானந்தம் உத்தமசிகாமணி - வல்வெட்டித்துறை)

லெப். தவக்குமார் (சோமசுந்தரம் பாக்கியராஜா - முள்ளியான்)

2ஆம் லெப். றெஜினோல்ட் (கபிரியேல் பேனாட்மரியநாயகம் - முள்ளியான்)

2ஆம் லெப். ஆனந்தகுமார் (ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் - குடத்தனை)



இலங்கை-இந்திய கூட்டுச்சதியால்
05-10-87 ல் சயனைட் உட்கொண்டு
வீரமரணமடைந்த லெப். கேணல்

## புலேந்திரன்

(குணநாயகம் தருமராசா)

பாலையூற்று திருமலை

வீர மரணம்

05 10 19 7

பாரி புகழ் புலேந்திரா நீ
ஓர் பெரும் வீரனாகி
கூர்மையாய் போர்கள் புரிந்து
நேர்மையாய் வாழும் போது
தமிழீழம் தனைக்காக்க
வீரநடை வேங்கையாகி
பேரும் ஓர் புலேந்திரனாகி
பருத்தித்துறை கடல்தனிலே
கடற்புறா பயணத்திலே
ஊறுபோல் எதிரியான
பெருக்கு அமைதி காத்த
பாரதப் படைகளினதும்
சிறிலங்காப் படைகளினதும்
கூட்டு சதியால்
உம் இன்னுயிரை
அழித்தனரே - உன்
உயிரைத் தான் அழித்தனர்
பாசிச வெறியர்கள்
உன் கொள்கையை
அழிக்க முடியாது - உன்
வழி நாம் தொடர்வோம்.

திருமலை                திருமலை மக்கள்

(B/3254)

2ஆம் லெப்.
ஆனந்தகுமார்



2ஆம் லெப்.
றெஜினோல்ட்



கப்டன் பழனி

1988 ஆம் ஆண்டு அளம்பில், உடப்புக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**2ஆம் லெப். கௌசிகன்** (வெற்றிவேலு கருணாகரன் - 5ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)

தேசவிரோதிகளாலும் இந்தியப் படையினராலும் மேற்கொள்ளப்பட்ட முற்றுகையின் போது வீரமரணமெய்திய

**ரஞ்சன்** (பொன்னுத்துரை உதயகுமார் - குரியாலை)

முல்லைத்தீவு, அளம்பில் வீதியில் இந்தியப் படையினரால் வீட்டுக்குள்ளிருந்து இழுத்து வரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 4 தமிழர்கள்

நல்லூர், சங்கிலியன் வீதியில் தேசவிரோதிகளால் மின்சாரம் பாய்ச்சிக் கொல்லப்பட்ட தேசபக்தர் தருமலிங்கம் துரையம்மா

இடைக்காட்டில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த தேசவிரோதிகளின் முகாம் மீதான தாக்குதலின் போது வீரமரணமெய்திய

**கப்டன் ஆனந்தன்** ((சுப்பிரமணியம் கருணாகரன் - செம்மலை மணலாறு)

**பாரத்** (செபமாலை இயோபார்பெர்னாண்டோ - வண்ணாங்குளம், முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு
கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(H/3240)



கப்டன் கரன்



கப்டன் மிரேஸ்



லெப். தவகுமார்

**※ சிந்தனைக்கு ※**

அனுபவத்தை விவேகத்துடன் பயன்படுத்திக் கொண்டால் எதுவுமே வீணானதல்ல.

— ஃபிரான்ஸுவா ஜெனோரென்சென்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 05-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05

## தொண்டமான் தமிழன் அவர்கள் மறக்கவில்லை

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக எஸ் தொண்டமானின் நடவடிக்கைகள் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதைவிடப் பயங்கரமான செயலாகும் அத்துடன் இது பாதுகாப்புப் படையினரின் மனோதிடத்தையும் அழித்துவிடக்கூடிய செயலாகும் எனக் கொழும்பில் இருந்துவரும் பிரபல ஆங்கில பத்திரிகை ஓங்கி ஒலித்துள்ளது

மேலும், தொண்டமானை மலையக ஆக்கிரமிப்பாளர்களின் தலைவர் என்றும், இந்தியாவினதும், விடுதலைப் புலிகளின் நண்பரென்றும், ஆபத்தானவர் என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

அமைச்சர் தொண்டமானுக்கும் மலையக மக்களுக்கும் எதிராக ஓங்கி ஒலித்திருக்கும் இவ் இனவாதக்கூச்சல் தனியாக மலையக மக்களுக்கு எதிரான ஒரு கூச்சல் அல்ல. இலங்கையில் உள்ள சிறிய இனங்களுக்கு எதிரான பேரினவாத கூச்சலின் ஒரு பகுதியேயாகும்.

தென்னிலங்கையில் வகுப்பு வன்முறைகள், இன மோதல்கள் எப்பொழுதும் வெடிக்கலாம். அரசியல் கட்சிகளும், பேரினவாதப் பத்திரிகைகளும் அதைநோக்கி சிங்கள மக்களை இட்டுச் செல்வதாக வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும், செய்தி ஸ்தாபனங்களும் தெரிவிக்கின்றன.

மலையக மக்கள் உள்ளிட்ட தமிழ் மக்கள், அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்கும் எதிராகவும் இனவாதக்கூக்குரல்கள் எழுப்பப்படுகின்றன.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிரான குற்றச்சாட்டை முன்வைத்தவர்கள் விரைவில் சிங்கள மக்களின் உணர்ச்சிகளைக் கிளறக்கூடிய புலிகளுடனும், தமிழ்மக்களுடனும் தொடர்புடைய இனவாத நோக்கிலான பிரச்சினைகளையே முன்னெடுக்கின்றனர். இதனைப்பற்றி முன்னரும் ஒரு தடவை இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம் வரலாற்று ரீதியாக தமிழருக்கு எதிராக இனவாதபோதனையில் ஊறித் திளைத்த சிங்கள மக்களுக்கு இவ்விவகாரம் கிளர்ச்சி ஊட்டும் என்பதில் சந்தேகமில்லை ஆகையினால் அவர்கள் எதிர்பார்த்தது போன்று, இனவாதக் கூச்சல் புதுத்தென்புடன் புத்துணர்ச்சி பெற்றுள்ளது.

புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தொடர்பான

# பேரத்துக்கு உடன்படாத தலைமையைப் பெற்றுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டம்

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான போராட்டங்கள் முனைப்படைந்த காலங்களில் அவை ஒப்பந்தங்கள் என்ற பெயரில் பேரம் பேசப்பட்டு வந்தன. எழுச்சி பெற்றுக் கொண்டுவந்த போராட்டங்கள் இவ்வாறான பேரங்கள் நடைபெற்ற காலங்களில் சடுதியாக நிறுத்தப்பட்டு, பின்னர் போராட்டங்களுக்கான அடிப்படையே மறக்கப்பட்டு போராட்ட வேகம் படிப்படியாகக் குறைந்து வந்தன மீண்டும் அதிகவிலை கொடுத்து போராட்டத்தை முனைப்படையச் செய்ய வேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்

விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரன் இந்திய மத்திய அரசிற்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

ஆனால் இந்திய -சிறிலங்கா அரசுகள் இவ்விடயத்தைப் பொருட்டாக மதிக்கவில்லை. விடுதலைப் புலிகளை வழிக்குக் கொண்டுவர - அல்லது அழிப்பதற்கான ஒரு யுத்தத்தை திணிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகவே கருதின. போராளிகளைக் கொழும்புக்கு கொண்டு செல்வதற்கான ஆலோசனைகளை மேற்கொண்டன.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தலைவர் பிரபாகரனினால் அனுப்

கரனின் கேள்வி. இந்தியப் படையினரை நோக்கிய திரு. மகேந்திராசா'' கைது செய்யப்பட்ட இராணுவத்தினரை விடுதலை செய்ய வேண்டும்'' என்பது உட்பட இந்தியப் பிரதமரின் நிபந்தனைகளை திரு பிரபாகரனிடம் தெரிவித்தார் உடனே பிரபாகரன் ''பேரம் பேசுவது புலிகளுக்குப் பிடிக்காது உடனே புறப்பட்டு வா'' என்றார். திரு. மகேந்திராசா புறப்படத் தயாரானார்.

அப்போது இந்திய இராணுவ அதிகாரிகள் ''பிரபாகரன் என்ன சொல்கிறார்'' என வினாவினர் திரு மகேந்திராசா தலைவரின் முடிவைத் தெரிவித்தார் இந்திய இராணுவ அதிகாரிகள் வியப்பில் ஆழ்ந்தனர். அபாயகரமானநிலைமை ஒன்று உருவாகப் போகின்றது என்ற அதிர்ச்சியில் பிரபாகரனின் செய்தியை நம்பத் தயங்கினர் அப்போது மீண்டும் வோக்கி-டோக்கியில்திரு. பிரபாகரனின் குரல் ஒலித்தது. ''என்னவாம்?'' என்று கேட்டார். ''உங்கள் செய்தியை நம்ப முடியாமலிருக்கின்றனர்'' எனப் பதில

தலைவர் பிரபாகரனுக்கு அவர் ஒரு கடிதத்தையும் அனுப்பியிருந்தார். அதில் ''இலங்கை அரசின் சட்ட திட்டங்களுக்கு நான் எந்த நேரத்திலும் கட்டுப்படப் போவதில்லை இவற்றை மீறி தன்னை கொழும்புக்குக் கொண்டு செல்லப்படும் பட்சத்தில் என்னையே அழித்துக் கொள்ளத் தயங்கமாட்டேன்'' என ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார். இதைப் போன்ற ஒரு கடிதத்தை திரு குமரப்பாவும் எழுதியிருந்தார். அத்துடன் கைது செய்யப்பட்ட 17 போராளிகளும் கூட்டாகக்கையொப்பமிட்டு ஒரு கடிதத்தை எழுதியிருந்தனர்

5-10-87 அன்று பிற்பகல் 2-00 மணியளவில் இந்திய இராணுவஉயர் அதிகாரியான ஹர்கிரட்சிங் அவர்களிடம் பிரிகேடியர் மகேந்திராசா ஒரு கடிதத்தைக் கையளித்தார் அதில் ''இதனால் ஏற்படும் பயங்கர விளைவுகளுக்கு இந்தியப் பாதுகாப்புப் படையினரே பொறுப்பு எமது வீரர்கள் இருக்கேரி

> ஆயுதக்கையளிப்பின் பின் இந்திய அரசின் ஆசீர்வாதத்துடன் இயங்கிய தமிழ்க் குழுக்களினால் பல விடுதலைப்புலிகள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அக்காலகட்டத்தில் திருமலைக்கு தாம் செல்வதற்கு பாதுகாப்புத்தரும்படி புலேந்திரன் இந்திய இராணுவ அதிகாரிகளைக் கேட்டிருந்தார். அவர்கள் அதனை அசட்டை செய்து வந்தனர். இறுதியாக ஒரு நாள் பெரியசாமி என்ற அதிகாரியிடம் சென்ற புலேந்திரன் "இன்று போக பாதுகாப்புத்தர முடியுமா? ''என்றுகேட்டார். அவர் ''இல்லை'' எனப்பதிலளித்தார். "சரி எப்போது போகப் பாதுகாப்புத்தருவீர்கள்? '' என்று புலேந்திரன் கேட்டபோது "இன்றும் இல்லை, இனி எப்போதும் இல்லை'' எனப்பதிலளித்தார். புலிகளின் பாதுகாப்புப் பற்றி மட்டும் பெரியசாமி இக்கருத்தைக் கூறவில்லை. அனைத்து தமிழீழ மக்களின் பாதுகாப்புப்பற்றி இந்தியப் படையினரின் நிலைப்பாடே இதுதான் என்பதை காலம் நிரூபித்தது.

> சிறிலங்கா இராணுவத்தினர் யுத்த முனையில் கைது செய்யப்பட்டவர்கள் நாம் சமாதான ஒப்பந்தத்தின் பின் கைது செய்யப்பட்டவர்கள் எனவே இவ்விரண்டையும் ஒப்பிட முடியாது. தமிழீழ இலட்சியத்திற்காகப் போராடும் எம்மை வைத்து இடைக்கால நிர்வாக சபை குறித்து பேரம் பேசுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது
>
> —திருமலைமாவட்ட தளபதி புலேந்திரன்

யுத்த முனையில் கைது செய்யப்பட்டவர்கள் நாம் சமாதான ஒப்பந்தத்தின் பின் கைது செய்யப்பட்டவர்கள். எனவே இவ்விரண்டையும் ஒப்பிடமுடியாது. தமிழீழ இலட்சியத்திற்காகப் போராடும் எம்மை வைத்து இடைக்கால நிர்வாகசபை குறித்து பேரம் பேச முடியாது'' (ஈமமுரசு 6-10-87) என்று குறிப்பிட்டார். அத்துடன்

துணர்ச்சி பெற்றுள்ளது.

புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை தொடர்பான விவகாரமாக எழுப்பப்பட்ட இனவாதக் கூச்சல் தற்பொழுது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்வதுடன் இணைக்கப்பட்டு பிரசாரப்படுத்தப்படுகின்றது. நிலைமை யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்றால் வன்முறை வெடிக்கும் என இனவாதிகளால் மிரட்டப்படுகின்றது. மக்கள் வன்முறை நோக்கி தூண்டப்படுகின்றார்கள்.

அரசியல் வாதிகளின் இனவாதக் கூச்சலுக்கு சிங்களப் பத்திரிகைகளும் களமாக அமைகின்றன. சிங்கள வாசகர் போக்கிலே இலங்கையில் ஏற்பட்டுள்ள நீண்ட இரத்தக்களரியை அவை கருத்திற் கொள்வதில்லை. இரத்த ஆறு ஓடுவதையே விரும்புகின்றன.

ஆனல், அமைச்சர் தொண்டமானின் அண்மைக் கால பேட்டிகளும், அறிக்கைகளும் இவற்றை அவர் உணர்ந்தவராக வெளிப்படுத்தவில்லை. தான் ஒரு பெரும் அரசியல் வெற்றியை ஈட்டிவிட்டதாகவும் தனது நீண்ட கால அரசியல் அனுபவமும், முதிர்ச்சியும் மலையக மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட்டதாகவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அனுபவமும், முதிர்ச்சியும் அவசியம் எனவும் பறைசாற்றிவருகிறார். தனது முன்மாதிரியை மற்றவர்களும் பின்பற்றப்படவேண்டும் எனவும் போதனை செய்கிறார்.

அமைச்சர் தொண்டமான் செய்யும் போதனைகள் அவர் இலங்கையின் வரலாற்றில் தனது கண்முன் நடந்தவற்றையே சரியாக மதிப்பீடு செய்யாததன் விளைவே ஆகும். திரு. தொண்டமானைப் போலவே நீண்ட அரசியல் அனுபவமும், முதிர்ச்சியும் உள்ள தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் இருந்தார்கள். அவர்களும் தற்பொழுது திரு. தொண்டமான் செய்துள்ளமை போல் தமிழ் மக்களின் அடிமைச் சாசன ஒப்பந்தங்களை எழுதிக் கொடுத்துவிட்டு வெறும் அமைச்சுப் பதவிகள் மூலம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் என எண்ணினார்கள். ஆனால் அவர்கள் அதில் வெல்லவில்லை. தாம் ஏமாற்றப்பட்டதை பின்னரே உணர்ந்தார்கள். அவர்களின் முதிர்ச்சியும், அனுபவமும் அவர்களுக்கு கைகொடுக்கவில்லை.

சிறிலங்கா அமைச்சரவையில் தமிழர் ஒருவருக்கு கிடைக்கும் பதவி அவரின் தனிப்பட்ட அபிலாசைகளைத் தீர்க்குமே ஒழிய சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடாது. அதற்குப் பேரினவாத சக்திகள் இடம் கொடுக்கமாட்டாது. இந்நிலையில், தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுக்கான முதிர்ச்சியும், அனுபவமும் என்பதனைவிட அர்ப்பணிப்பும், துணிவும், திறமையும் உள்ள தலைமையே தேவை. இதனை அமைச்சர் தொண்டமானும் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது. பேரங்களுக்கு மசியாத தலைமையைப் பெற்றிருப்பதனால்தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் தற்போது உலகில் ஒடுக்கப்படும் சிறிய இனங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகின்றது.

★ ★

குமரப்பா, புலேந்திரன் உட்பட பதினேழு விடுதலைப் புலிகள் 3-10-87 அன்று சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டதும் ''இது இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு முரணானது. இந்தியாவில் இருக்கும் எமது தலைமைக் காரியாலயத்தை மூடிவிட்டு அங்கிருந்த தஸ்தாவேஜுகளையும் பிற ஆவணங்களையும் எடுத்து நம் பிரதேசத்துக்குக் கொண்டுவர இந்திய கடற்படையிடம் பாதுகாப்பும் அனுமதியும் கேட்டோம். பல தடவை கேட்டோம். ஆனால் தரப்படவில்லை எனினும், பொருள்களை எடுத்து வருவதுபற்றி இந்திய அரசுக்கு அறிவித்திருந்தோம்.

ஆயுதங்களை ஒப்படைத்த பின் எமது பாதுகாப்புக்களை இந்தியப்படையிடம் ஒப்படைத்தோம். எம்மை யாராவது கைது செய்வதைத் தடுக்க வேண்டியவர்கள் அவர்களே.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. இவ்வாறு நிலைமை இருக்கும்போது சிறிலங்கா அரசு எம்மைக் கைது செய்யும் கட்டத்தில் இந்தியாவே எம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கடமைப்பாட்டுக்குரியது. தவறின் அது ஆபத்துக்குரியதாகும்.'' இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனினால் அனுப்பட்ட செய்தியொன்றினை பிரதித் தலைவர் கோ. மகேந்திரராசா கொண்டுசென்றார். கைது செய்யப்பட்ட போராளிகளை விடுதலை செய்வது பற்றிய இந்திய அரசின் நிலை ஒரு மணித்தியால அவகாசத்தினுள் தமக்குத் தெரியப்படுத்தவேண்டும் என அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். இந்திய இராணுவ அதிகாரிகளினூடாக செய்தி இந்தியப் பிரதமருக்கு தெரியப்படுத்தப்பட்டது. செய்தி அனுப்பியதும் பதிலுக்காகக் காத்திருந்தார் பிரதித்தலைவர். ஒரு மணித்தியால அவகாசம் முடிவுறும் தருணத்தில் அப்போதைய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டிக்ஸிற் மூலமாக திரு. ராஜீவ் காந்தியின் பதில் கிடைத்தது. அவரது பதிலில் கைதுசெய்யப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரை புலிகள் விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனையும் அடங்கியிருந்தது.

எந்த நேரத்தில் [illegible] இந்தியப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதை திரு மகேந்திரராசா முன்னரே பிரபாகரனுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். அதிலிருந்து சரியாக ஒரு மணித்தியாலத்தில் திரு மகேந்திரராசாவின் கையில் இருந்த வாக்கிடோக்கியில் பிரபாகரனின் குரல் ஒலித்தது. இந்த மண்ணில் காலடி எடுத்துவைத்ததிலிருந்தே பிரபாகரன் என்னென்ன உத்தரவுகள் போடுகிறார் என்பதை அவதானித்துக் கொண்டிருந்த இந்தியப் படையினர் திடீரென உஷாரானார்கள்.

''இந்தியப் பிரதமரின் பதில் என்ன?'' திரு. பிரபா

ருக்கின்றனர்'' எனப் பதிலளித்தார் திரு மகேந்திரராசா. அப்போது திரு பிரபாகரன் ''நான் சொன்னதை மீண்டும் சொல்கிறேன் அவர்கள் கேட்கட்டும்'' என்று சொல்லிவிட்டு ''பேரம்—பேசுவது—புலிகளுக்குப்—பிடிக்காது!'' என்பதை ஒவ்வொரு வார்த்தையாக அழுத்தம் திருத்தமாகக் கூறினார். இவ்வார்த்தைகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உறுதித் தன்மையை எடுத்துக் காட்டின. பேரங்களுக்கு மசியாத தலைமை இங்கிருக்கிறது. எனவே இதை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை இல்லையேல் இந்தியாவின் பிராந்திய நலனைப் பேண முடியாத நிலை உருவாகிவிடும் என்ற முடிவுக்கு இந்திய அரசைத் தள்ளின.

★ ★

தம்மை வைத்துப் பேரம் பேசுவதை அனுமதிக்க முடியாது என விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான புலேந்திரன் உறுதியாகத் தெரிவிக்கிறார். ''சிறிலங்கா இராணுவத்தினர்

எமது வீரர்கள் இறக்க நேரிடின் நாம் யுத்த நிறுத்தத்தைப் பேண மாட்டோம்'' என உறுதியாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் இந்திய அரசு இவையனைத்தையுமே அசட்டை செய்தது. இறுதி வரை புலிகள் போருக்கு வருவார்கள் என்றே கருதியது. அது நடக்காமற்போகவே உலகில் பெரிய வரலாற்றுத் தவறுகள் என்று குறிப்பிடப்படுபவற்றுள் ஒன்றான புலிகள் மீதான போரை இந்தியா திணித்தது. இறுதியில் மீண்டும் இவ்வாறான ஒரு தவறை குறிப்பிட்ட காலத்துக்குத் தானும் செய்வதில்லை என்ற முடிவை இந்தியா எடுக்க நேரிட்டது.

அதேவேளை இப்போர் தமிழீழ மக்களைப்பொறுத்தவரை இனிமேல் ஒரே தலைமை - பேரங்களுக்கு மசியாத புலிகள் தான் அத்தலைமை என்ற முடிவை எடுக்க வைத்தது.

— [illegible]

# புலிகள் தப்பி ஓட்டம்
# பொலீஸ் பதவி நீக்கம்

கைது செய்யப்பட்ட புலிகள் தப்பியோடியதைத் தொடர்ந்து அவர்களுக்குப் பொறுப்பாக இருந்த பொலிஸ் அதிகாரிகள் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தில் பல இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் சிலர் பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இதில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பொலிசார் ஆகியோர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி மணிமேகலை இராசலிங்கம்

திருநெல்வேலி தாளையடி ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி மணிமேகலை இராசலிங்கம் 04-10-91 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகிறது.

திரு. இராசலிங்கம்
ரூபன் ஸ்ரோர்ஸ்
திருநெல்வேலி மார்க்கட்

(R/1810)


# தமிழ் நாட்டின் கரையோரங்களில் 'ஒப்பரேஷன் நாரை' நடவடிக்கை

(சென்னை)

தமிழக அரசால் கரையோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ''ஒப்பரேஷன் நாரை'' (OperationFlamingo) எனப்பெயர்சூட்டப்பட்டுள்ளது.

கரையோர மாவட்டங்களான தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகியவற்றில் தேசவிரோத சக்திகளின் நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளின் ஆரம்பமே இந்த ஒப்பரேஷன் நாரை என்று தமிழக சட்டம் ஒழுங்குத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம் தெரிவித்துள்ளார்.

பாக்கு நீரிணையில் இந்திய கடற்படைப் படகொன்றில் இருந்தவாறு பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அவர் ''நாரைகளின் குளிர்கால வசிப்பிடமான குமரிமுனை மற்றும் வேதாரணியம் சரணாலயங்களை மீண்டும் பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் பாதுகாப்பான இடங்களாக உத்தரவாதப்படுத்த அதிகாரிகள் விரும்பியதால் இந்த பாதுகாப்புத்துறை நடவடிக்கைக்கு 'ஒப்பரேஷன் நாரை' என்ற குறிச் சொல் இடப்பட்டது'' என்று தெரிவித்தார்.

## சொற்பொழிவு தொடரில் 2ஆம் அமர்வு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் சொற்பொழிவுத் தொடரின் இரண்டாவது அமர்வு நாளை 6 - 10 - 91ஞாயிற்றுக்கிழமை நிகழவுள்ளது.

இத்தொடர் சொற்பொழிவில் ''60 ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்'' எனும் பொருள் பற்றி மூதறிஞர் திரு.க.சி. குலரத்தினம் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார்.


## 62-ம் நாள் நினைவலைகள்

தமிழீழ மண்ணில் மலர்வு 08-06-71



ஆனையிறவில் மடிவு 05-08-91

05-08-91 அன்று ஆனையிறவில் வீரமரணம் அடைந்த

### வீரவேங்கை சீலன்

(குமாரசாமி ஜெயானந்தன்)
(நீர்வேலி தெற்கு)

அவர்களின் 62ஆம் நாள் நினைவில் அவரையும், அவருடன் வீரமரணம் அடைந்த ஏனைய வேங்கைகளையும் நினைவு கூருவோம்

குடும்பத்தினரும்
நண்பர்களும்

(R-1807)


## இராமேஸ்வரம் கடலில்

# இரு இலங்கைத் தமிழர் சயனைட் அருந்தி மரணம்

தமிழ் நாடு ராமேஸ்வரம் கடற்கரைப்பகுதியில் 3 கிலோ மீற்றர் தொலைவில் சென்ற படகு ஒன்று கைப்பற்றப்பட்ட போது அதில் இருந்த இருவர் சயனைட் அருந்தி மரணமடைந்ததாகவும் மேலும் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரியவருகிறது

இவர்கள் ராமேஸ்வரத்தில் இருந்து மன்னாரை நோக்கி வரும் போதே கைது செய்ய முற்பட்ட போது சயனைட் உட்கொண்டனர். ஏனைய இரு பொதுமக்கள் உட்பட ஆறுபேர் வரையில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமலை மாவட்டத் தளபதி

### லெப். கேணல் புலேந்தி அம்மான்

இவருடன்

யாழ். மாவட்டத் தளபதி லெப். கேணல் குமரப்பா உள்ளிட்ட 12 புலிகளுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்,

புலேந்தி அம்மான் மீண்டும் பிறப்பானோ!


போராட்டத்தில்

கல்வி பயிலும் மாணவர்கள் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் நமது போராட்டத்திற்கு சகல விதத்திலும் பயன்படக்கூடியவர்களாக உருவாக வேண்டுமென்பதே நமது நோக்கமாகும்.

எமக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் உள்ள வேறுபாடும் எமக்கு பலம் உண்டு. தியாக சிந்தனை உண்டு, உறுதி உண்டு நம்மைப் போன்ற உறுதிமிக்க போராளிகள் இன்று உலகில் இல்லை, எமது போராட்டத்தில் ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம் அறிவு பூர்வமானவர்கள் தம்முடன் முழுமையாக இணைவதன்மூலம் அவ்வாறானகுறைபாடுகளை களைய முடியும்

நாம் நமது போராட்டத்தை ''இப்படித்தான் போக வேண்டும்'' என்று செயற்பட்டால் எமது போராட்டம் முறிய வேண்டிய நிலைதான் ஏற்படும் தார்மீகமும் சமத்துவமும் உலகில் பேச்சளவிலேயே உள்ளன சர்வதேச அரசியல் ஏமாற்று வித்தையாகும். பிரேமதாசா, நரசிம்மராவ் ஆகியோர் எப்படியும் கூறலாம்

ஆனால் நாம் நமது போராட்டத்தை சரியான நுட்பமான பாதையில் கொண்டு செலுத்துகிறோம். நாம் நமது மக்களுக்கோ நமது இனத்தின் விடிவுக்கோ தீங்கு விளைவிக்கும் வகையில் செயற்படுகிறோம் என்பதே உண்மையானதாகும் என்றார்.

மேலும் இரண்டு

பதினாறுபேர் கைது செய்யப்பட்டனர் என்றும் இவர்களில் மிராகுதார் சண்முகம் இறந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் விடுதலைப்புலிகள் கையெறி குண்டுகள் தயாரிப்பதற்கு உதவி புரிந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு ரவி என்ற இளைஞர் ஒருவரை கோவை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர் மத்திய புலனாய்வுக் குழுவினரால் கைது செய்யப்பட்ட விக்னேஷ் என்ற விக்கியின் நெருங்கிய சகா என்றும் கோவை பொலிசார் தெரிவித்தனர்

12 வேங்கைகளின்

திரு. அரசண்ணாவின் தலைமையுரையுடன் ஆரம்பமாகும்.

விடுதலைப்புலிகள் ...

வவுனியா

நொச்சிமோட்டையில் செய்வதனால் ஏற்படும் நெருக்கடிகளையும் குறைக்கும்முகமாக வவுனியா வியாபாரத்தின் நோக்கம் செல்பவர்களுக்குரிய போக்குவரத்து ஒழுங்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என போக்குவரத்து கண்காணிப்பு குழு அறிவித்துள்ளது அதன் பிரகாரம்

★ ஞாயிறு, திங்கள் - வவுனியா மன்னார் மாவட்டம்

★ செவ்வாய், புதன் முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள்.

★ வியாழன், வெள்ளி - யாழ்ப்பாணம், கிளிநொச்சி.

5 ஆம் திகதி சனிக்கிழமை முல்லைத்தீவு மட்டக்களப்பு, திருக்கோணமலை அதே


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி





## கப்டன் ஆனந்தன்

(சு. கருணாகரன்)

| அன்னையின் மடியில் | தாயக மீட்பில் |
| --- | --- |
| 22.11.68 | 05.10.89 |

வன்னியின் விளை நிலத்தில்
வந்துதித்த எங்கள் வண்ண நிலவே .......
செம்மலையில் குடி கொண்ட ஒளிவிளக்கே
சுதந்திரத்தின் சுவாசத்திற்கு சுமையானவனே ......
கொண்டதோர் கொள்கை தன்னில்
புனிதப் போர்க் கொடி கொண்டொரு
விடியலைத் தேடிய வீரமறவனே

அன்னியப் படைகளும் அண்டிய
கூட்டங்களும் இளைத்திட்ட
கொடுமைகளை அடியொடு அறுக்க
அணி பல திரட்டி திறம்பல படைத்தவனே
ஆண்டு இரண்டு ஆன பின்னும்
உன் நினைவில் நனைகின்றோம்
நின் வழி தொடர்கின்றோம்

வன்னி மக்கள்

(R/1808)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

தெரிவிக்கின்றோம்,

புலேந்தி அம்மான் மீண்டும் பிறப்பானோ!
திருமலை பெற்றெடுத்த தீரனே!
வீரவேங்கையாய் விளையாடிய காலம்
தமிழ்த் தாயின் முதல் அத்தியாயம்
நீயில்லாத குறை இப்போது
வெளியாகத் தெரியுதப்பா
புலேந்தி அம்மான் வருகை கண்டால்
புல்லரிக்கும் எவர் மனமும்
மீண்டும் பிறப்பானோ எங்கள் புலேந்தி அம்மான்

அன்னார், அன்னி
குடும்பத்தினர்

புலேந்தி நகர், குருநகர்

(3256)

A/L 93

கலை, வர்த்தக, விஞ்ஞான
பிரிவைச்சார்ந்த மாணவர்கள்
9-10-91 (புதன்) பி. பகல் 3-00
மணிக்கு நிறுவனத்திற்கு
சமுகமளிக்கவும்

யூனிவேர்சல்
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

(B/3258)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி -- யாழ்ப்பாணம்

A/L--91
DAY CLASSES

(சகல பாடங்களுக்குமான மீட்டலும் கடந்த கால வினா - விடை வகுப்புக்கள்) ஆரம்பம் 07-10-91 (8-00 மணி)

நிர்வாகி
க. அருள்நங்கை

(B/3239)

கும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசா அவர்கள் சிறப்புரையாற்றுவார் தொடர்ந்து வேங்கைகளின் நினைவுரைகளை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திருமாறன், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்விஜெயா, தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படைத்தளபதி திரு. சூசை மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா, யாழ். மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் திரு யோகி ஆகியோர் நிகழ்த்துவர். நிகழ்வுரையைத் தொடர்ந்து பல கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. பிரிவு ரீதியாக வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் அனைத்து தமிழீழ மக்களையும் இந் நிகழ்ச்சியில் கலந்து இந்த மாவீரர்களின் இறுதி இலட்சியத்தை வென்றெடுக்க ஓர் அணியில் திரளுமாறு விடுதலைப் புலிகள் மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

திருக்கோணமலை அதே போல் தொடர்ந்து வரும் சனிக்கிழமை ளில் யாழ்ப்பாணம். கிளிநொச்சி, பின்னர் வவுனியா, மன்னார் என்ற வரிசைக்கிரமத்தில் அனுமதி வழங்கப்படும்.

யாழ் மாவட்ட

கலந்துகொள்ளச் சென்றிருக்கும் சபாநாயகர் நாடு திரும்பியதும் கிராவஸ்தியில் இடம் ஒதுக்க வேண்டாமென கோரும் நாற்பது உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மகஜரொன்றை அவரிடம் கையளிக்க தீர்மானித்துள்ளனராம்.

பாராளுமன்ற உதவிச்செயலாளருக்கு இதுபற்றி ஏற்கனவே தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

மதகுருகளின்

உறுதி அளித்துள்ளதாக லலித் பாராளுமன்றத்தில் கூறியுள்ளது அறிக்கைகளில் உள்ளன.

மேலும் சிறிசேன ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதாகக் கூறப்படும் விவகாரத்தை அடிப்படையாக வைத்து இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக இந்தியாவைத் தூண்டுவதே எதிர்க்கட்சியினரினதும், ஐ. தே. க. அதிருப்தியாளர்களினதும் தற்போதைய தந்திரோபாயமாக இருக்கிறது என்றார்.

இந்தியா - இலங்கை மீது ஆத்திரம் கொள்வதை விட, விடுதலைப் போராட்டம் என்ற போர்வையில் இலங்கைப் பயங்கரவாதிகளுக்கு இந்திய மண்ணில் வைத்து ஆயுதப் பயிற்சியும் வழங்கி நிதியுதவியும் செய்து இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபட அனுமதித்தமைக்காக இந்தியா மீது இலங்கையே கோபப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.